**REVISED**

**செய்தி வெளியீடு எண் : 250** **நாள்: 21.02.2022**

# தமிழ் வளர்ச்சித் துறை
# உலகத் தாய்மொழி நாள் இன்று (21.02.2022) கொண்டாடப்பட்டது.

1999ஆம் ஆண்டு முதல் பிப்ரவரி திங்கள் 21ஆம் நாள் உலகத் தாய்மொழி நாளாக யுனெஸ்கோ நிறுவனத்தால் அறிவிக்கப்பட்டு ஆண்டுதோறும் "உலகத் தாய்மொழிநாள்" கொண்டாடப்பட்டு வருகிறது. அவ்வகையில் தமிழ் மொழியின் சிறப்பை இளைய தலைமுறையினர் அறிந்து கொள்ள வேண்டும் எனும் உயரிய நோக்கில் ஒவ்வொரு ஆண்டும் " உலகத் தாய்மொழி நாள்" தமிழ் வளர்ச்சித் துறையால் கொண்டாடப்பட்டு வருகிறது.

அவ்வகையில், இவ்வாண்டும் உலகத் தாய்மொழி நாள் 21.02.2022ஆம் நாளன்று சென்னை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் அமைந்துள்ள ஊடக அரங்கில் காலை 9.00 மணிக்குத் தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரி மாணவர்களின் மங்கள இசையுடன் தொடங்கியது. தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறையின் அரசுச் செயலாளர் திரு. மகேசன் காசிராசன் இ.ஆ.ப. அவர்கள் தலைமையேற்று உரையாற்றினார். தஞ்சாவூர், தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் மேனாள் துணைவேந்தர் முனைவர் ம.இராசேந்திரன் அவர்கள் விழாச் சிறப்புரை ஆற்றினார். அவர்தம் சிறப்புரையில் மொழியின் சிறப்பு குறித்தும், ஒருவர் தம் தாய் மொழியைத் தற்போதைய காலத்திற்கேற்றவாறு பல்வேறு மொழிகளிலிருந்தும் கருவிகளின் துணைக்கொண்டு மொழிகளுக்கான விவரங்களை மொழிபெயர்த்து அறிந்துகொள்ளவும் தற்போதைய கணினித் தொழில்நுட்பம் மிகவும் பேருதவியாக உள்ளது எனவும், நாம் கருவிகளின் துணைக்கொண்டு செயல்பட்டு கொண்டிருக்கிறோம் பேசிகொண்டிருக்கிறோம் எனப் பல்வேறு எடுத்துக்காட்டுகளுடன் விரிவாக எடுத்துரைத்தார். மேலும் தமிழ் மட்டும் உலகத்திலேயே முதன்மையான மொழியாக விளங்குகிறது எனவும், இந்தத் தாய் மொழியைக் கொண்டாடுவதற்குத் தமிழருக்கு எல்லாத் தகுதியும் உள்ளது எனவும் தமிழின் சிறப்பினைக் கணினியுடன் ஒப்பிட்டும் பல்வேறு கருத்துகளைச் சிறந்த முறையிலும், பயனுள்ள வகையிலும் எடுத்துரைத்தார்.

அதனைத் தொடர்ந்து முதல் நிகழ்ச்சியாகத் "தாய்மொழி நாள் சில பதிவுகள்" என்ற தலைப்பில் பேரா. முனைவர் வ.ஜெயதேவன் அவர்களின் தலைமையில் கருத்தரங்கம் நடைபெற்றது. இக்கருத்தரங்க நிகழ்வில் முனைவர் வ.ஜெயதேவன் அவர்கள் ஆண்டுதோறும் தமிழ்நாட்டில் தாய்மொழி நாள் கொண்டாடப்படுகிறது எனவும், எவரும் நம் மொழியை விட்டுவிடக்கூடாது எனவும் தமிழ்மொழியின்மீது பிறமொழி ஆதிக்கம் செலுத்தவிடகூடாது எனவும், பல்வேறு வரலாற்றுச் சான்றுகளுடன் தனது கருத்தினைத் தெளிவுர எடுத்துரைத்தார். இக்கருத்தரங்கத்தில் முனைவர் உலகநாயகி பழனி அவர்கள் தமிழ் மொழி பற்றிய தகவல்களை உணர்வுபூர்வமாக, எடுத்துரைத்தார். தமிழ்மொழி மேலும் தழைத்தோங்க இறவாத புகழுடைய நூல்களை எழுதுதல் வேண்டும் எனவும், பிற நாட்டு நல்லறிஞர் நூல்கள் தமிழில் மொழிப்பெயர்த்தல் வேண்டும் எனவும், தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவச்செய்தல் வேண்டும் எனவும், இவற்றைத் தமிழ் வளர்ச்சித் துறை மேற்கொள்ள வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார். அடுத்ததாகக் கருத்துரை வழங்கிய மாநிலக் கல்லூரி முதல்வர் முனைவர் இரா.இராமன் அவர்களின் கருத்துரையில் "சாகும்போதும் தமிழ் படித்து சாகவேண்டும் என் சாம்பலிலும் தமிழ் மணந்து வேகவேண்டுமென" உணர்வு பூர்வமாகத் தமிழ் மொழியின் இனிமை, வளமை குறித்து தனது கருத்தினை வழங்கினார். சென்னை வானொலி நிலைய மேனாள் இயக்குநர் கவிஞர் செ.கமலநாதன் அவர்தம் கருத்துரையில் மலையாள மொழியின் சிறந்த பாடலாசிரியரும் பத்மபூசன் விருது, சாகித்ய அகாடமி விருது ஆகிய விருதுகளை பெற்றவருமான ஓஎன்பி குருப் என்பவர் பாரதியின் தமிழ் மண்ணில் பிறந்தவர்களை மிகவும் போற்றுதலுக்கும், வணங்குவதற்கும் உரியர்வர்கள் எனத் தெரிவித்தாகவும் கூறினார்.

அதனைத் தொடர்ந்து "இதனாலே பேணலாம் தாய்மொழியை...!" என்ற தலைப்பில் வழக்குரைஞர் பால.சீனிவாசன் அவர்கள் தலைமையில் கவியரங்கம் நடைபெற்றது. இக்கவியரங்கில் செல்வி கி.ஸ்ருதிலட்சுமி, செல்வி ஜெ.மீனாட்சி, திருமதி அரி.ரேகா, திரு.நல்ல.அறிவழகன் ஆகியோர் பங்கேற்று கவிபாடினர்.

முன்னதாக தமிழ் வளர்ச்சித்துறை (ம) உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநர்(கூ.பொ.) முனைவர் ப.அன்புச்செழியன் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். முடிவில் தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர் (நிருவாகம்) திரு.ம.சி.தியாகராசன் அவர்கள் நன்றியுரையாற்றினார்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**